**நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]**

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**CC.No.211/2025**

**P.W.2 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | லோகநாதன் |
| தந்தை / கணவர் பெயர் | : | தாமரைகண்ணன் |
| கிராமம் | : | தென்கோடிப்பக்கம் |
| வட்டம் | : | விழுப்புரம் |
| மாவட்டம் | : | விழுப்புரம் |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | 40 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 10–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 02.01 PM

1. நான் தற்போது தென்கோடிப்பக்கம் குடியிருக்கிறேன். நான் மளிகைக்கடை வைத்திருக்கிறேன். இந்த விபத்தில் இறந்தவர் என்னுடைய தம்பி கௌரிசங்கர். அவருக்கு குடிப்பழக்கம் இருந்ததால் குடியை மறப்பதற்காக பெங்களூரில் தங்கி மருத்துவம் பார்த்து வந்தார்.

2. கடந்த 2019 ம் தேதி நான் வீட்டில் இருந்தபோது எனது தம்பி ஜான் என்பவர் போன் செய்து இரவு 07.50 மணியளவில் ஆம்னி காரில் கௌரிசங்கர் அவரது நண்பர்கள் 3 பேரும் கோவை செல்வதற்காக காரில் மேட்டூர் டு பவானி மெயின்ரோட்டில் கூராண்டிபுதூர் அருகே கௌரிசங்கர் ஆம்னி காரை ஓட்டிச்சென்றபோது கர்நாடகா பதிவெண் கொண்ட லாரியை அதன் ஓட்டுநர் எந்த சிக்னலும், சைடு இண்டிகேட்டரும் போடாமல் நிறுத்தியுள்ளார்.

3. அதில் என் தம்பி ஓட்டிச்சென்ற கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும் கௌரிசங்கருக்கு தலையிலும், காலிலும் பலத்த அடிப்பட்டதாகவும், அவருடன் சென்றவருக்கும் பலத்த அடிப்பட்டதாக சொன்னார்கள். அனைவரையும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது மருத்துவர் பரிசோதனை செய்துவிட்டு என் தம்பி இறந்துவிட்டதாக சொன்னதாக சொன்னார்கள். அதன்பிறகு தகவல் தெரிந்து சேலத்திலுள்ள மணிபால் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன்.

4. இந்த விபத்திற்கு எந்தவித சிக்னலும் இல்லாமல் லாரியை நிறுத்தி வைத்திருந்த எதிரிதான் காரணம் என விபத்தில் அடிப்பட்ட என் தம்பியுடன் பயணம் செய்த நண்பர்கள் என்னிடம் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தனர். வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. யாருடைய கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. விபத்து நடந்து மருத்துவமனைக்கு சென்றுதான் எனது தம்பியை பார்த்தேன். மற்ற விவரங்களை நான் விசாரித்துதான் தெரிந்துக்கொண்டேன். நான் கேள்விப்பட்டவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 02.15 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை**

செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஓம்/–நா.கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.